செய்தி வெளியீடு

**தேசிய கணக்குகள் மதிப்பீடுகள்: 2021 மூன்றாம் காலாண்டு**

**இலங்கையின் பொருளாதாரம் 2021ஆம் ஆண்டின் 3ம் காலாண்டில் 1.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது**


தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சு**

தொ.பே: 94-011-2147071 தொ.நகல்: 94-011-2877938 மின்னஞ்சல்: national.accounts@statistics.gov.lk


இலங்கையின், 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுக்கான (ஜூலை 1 முதல் செப்டெம்பர் 30 வரை) உற்பத்தி அணுகுமுறையால் நடப்பு, நிலையான (2010) விலையில் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP), அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது.

ஏப்ரல் 2021 இன் பிற்பகுதியில் தொடங்கிய கொவிட் -19 தொற்றுநோயின் மூன்றாவது அலை ஆகஸ்ட் மாதத்திற்குள் தீவிரமடைந்து உச்சத்தை எட்டியது. நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் கொவிட் -19 ஆல் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையில் அதிக அதிகரிப்புடன் மூன்றாவது அலையின் தாக்கம் தீவிரமடைந்தது. கொவிட -19 வைரஸின் புதிய விகாரமான டெல்டாவால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை, மருத்துவமனை கொள்ளளவை விட அதிகமாக இருப்பதாகவும், இறப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இச்சூழ்நிலையானது சாதாரண சூழ்நிலைக்கு மீண்டுவரும் பொருளாதார நடவடிக்கைகளில் மீண்டும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது. நாடு முழுவதும் தொற்றுநோய் பரவியதால், குறுகிய காலத்திற்கு நாட்டை மூடுமாறு சமூகத்தின் பல்வேறு குழுக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்தன. தொற்றுநோய் பரவுவதைக் கட்டுப்படுத்த 2021 ஆகஸ்ட் 20 நள்ளிரவு முதல் நாடு முழுவதும் தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவை அரசாங்கம் விதித்தது. தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு அக்டோபர் 1 வரை 41 நாட்களுக்கு நீடித்தது.

அத்தியாவசியப் பொருட்கள் விநியோகச் சங்கிலியைப் பேணுதல், அந்நியச் செலாவணி வரவைப் பாதுகாத்தல் மற்றும் வீட்டு வருமானத்தை உறுதி செய்தல் ஆகிய நோக்கங்களுடன் தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தின் காலத்திலும் விவசாய நடவடிக்கைகள், பல உற்பத்தித் தொழில்கள், கட்டுமானம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சேவைகளைத் தொடர அரசாங்கம் அனுமதித்தது. இருப்பினும், தொற்றுநோய் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு ஆகியவற்றால் அந்த பொருளாதார நடவடிக்கைகள் தடைப்பட்டன. ஆபத்தில் இருந்து தப்பிக்க பெரும்பான்மையான மக்கள் சுயக்கட்டுப்பாட்டை கடைப்பிடித்ததை அவதானிக்க முடிந்தது. இந்தக் காலகட்டத்தில் பொருளாதார நடவடிக்கைகளில், குறிப்பாக மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், உற்பத்தித் நடவடிக்கை, கட்டுமான நடவடிக்கை, போக்குவரத்து, தங்குமிடம் மற்றும் உணவு வழங்குதல் மற்றும் தனியார் சேவைகளை வழங்குதல் போன்றவற்றில் தெளிவான சரிவு

ஏற்பட்டது. அதே சமயம், வெளிநாட்டு பண கையிருப்புக்கள் குறைந்து வருவதற்கான தீர்வாக, விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக உற்பத்தியாளர்களின் உள்ளீடுகளின் விலைகள் அதிகரித்தும் பொருளாதார நடவடிக்கைகளின் மந்தநிலைக்கு பங்களித்தது. இந்த சூழ்நிலையில், பல பொருளாதார நடவடிக்கைகள் முந்தைய ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் எதிர் வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்துள்ளன.

2020 ஆம் ஆண்டில் கொவிட்-19 தொற்றுநோயின் முதல் அலை அரசாங்கத்தால் நன்கு கட்டுப்படுத்தப்பட்ட பிறகு, வணிகங்கள் வழக்கம் போல் புதிய இயல்பான சூழ்நிலையில் மேற்கொள்ளப்பட்டன. அதே நேரத்தில் மக்களின் வாழ்க்கை முறையும் மீட்டெடுக்கப்பட்டது. அதன்படி, 2020 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் 1.3 வீதத்தால் வளர்ச்சியடைந்தது. 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது, 2020 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் பதிவுசெய்யப்பட்ட இந்த நிலையான உயர் மட்ட GDP மட்டத்திலிருந்து கணக்கிடப்படுகிறது.

2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்கான தேசிய கணக்கு மதிப்பீடுகள் பற்றிய அறிக்கையை வெளியிடுகையில், 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்கான பொருளாதார வளர்ச்சி 1.5 சதவீத எதிர்வளர்ச்சியென மதிப்பிடப்பட்டுள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் மேலும் தெரிவிக்கையில், நிலையான விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2021 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் ரூபா 2,497,489 மில்லியன்களாகவும் 2020 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் 2,536,490 மில்லியன்களாகும்.

மேலும், 2021ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் நடப்பு விலையில் இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 4,132,955 மில்லியன்களாக அதிகரித்து பதிவு செய்ததுடன் 2020ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் ரூபா 4,087,148 மில்லியன்களாகவும் பதிவு செய்துள்ளது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நடப்பு விலை மதிப்பில் 1.1 சதவீத நேரான மாற்றத்தை பதிவு செய்துள்ளது.

பொருளாதாரத்தின் மூன்று பிரதான பகுதிகளான: விவசாயம், கைத்தொழில், சேவைகள் நடப்பு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு இக் காலாண்டில் தமது பங்களிப்பினை முறையே 8.7 சதவீதம், 29.9 சதவீதம் மற்றும் 57.4 சதவீதமாக பங்களிப்பு செய்துள்ளன. இதற்கிடையில், 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள் 4.1 சதவீதம் பங்களிக்கின்றது.

2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், விவசாய நடவடிக்கைகள் 1.7 சதவீதம் என்ற சிறிய நேர்வளர்ச்சியைப் பதிவு செய்தன. தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தின் கீழும் நாடு முழுவதும் விவசாய நடவடிக்கைகளைத் தொடர அரசாங்கம் அனுமதித்துள்ளமையால் இது சாதகமாகியது. தொடர்புடைய காலாண்டில் கைத்தொழில் மற்றும் சேவைகள் தொடர்பான நடவடிக்கைகள் முறையே 2.1 சதவீதம் மற்றும் 1.6 சதவீதம் மறை வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தன. கடந்த ஆண்டின் இதே காலாண்டில், இந்த நடவடிக்கைகள் நேர் வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தன.

## விவசாய துறையின் செயற்பாடு

2020 ஆம் ஆண்டின் இதே காலாண்டில் பதிவுசெய்யப்பட்ட 3.1 சதவீத உயர் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், ஒட்டுமொத்த விவசாய நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 1.7 சதவீத மெதுவான வளர்ச்சியைப் பதிவு செய்தன. விவசாய நடவடிக்கைகளில் இந்த வளர்ச்சி குறிப்பாக 'தானியங்களின் வளர்ச்சி' (38.0 சதவீதம்), "தாவரப் பெருக்கம் மற்றும் விவசாய ஆதரவு நடவடிக்கைகள்" (13.6 சதவீதம்), “விலங்கு உற்பத்தி” (8.9 சதவீதம்), " எண்ணைப் பசை கொண்ட பழவகைகளின் வளர்ச்சி தேங்காய் உள்ளடங்கலாக” (8.8 சதவீதம்), “'வனவியல் மற்றும் மரம் வெட்டல்” (7.9 சதவீதம்), “பழங்கள் வளர்ச்சி” (6.4 சதவீதம்), ''வாசனைத் திரவியங்கள் வளர்ச்சி’ (3.6 சதவீதம்) மற்றும் “தேயிலை வளர்ச்சி” (2.8 சதவீதம்) என்பவற்றில் பிரதிபலிக்கின்றன. எனினும், "கடல் மீன்பிடித்தல்" (10.0 சதவீதம்), "'காய்கறிகளின் வளர்ச்சி" (9.8 சதவீதம்), "'இறப்பர் வளர்ச்சி" (8.1 சதவீதம்) மற்றும் "நன்னீர் மீன்பிடித்தல்" (5.2 சதவீதம்) ஆகியவை இக்காலாண்டில் கணிசமாக குறைந்துள்ளன. மேலும் "நெல் வளர்ச்சி" (1.0 சதவீதம்) சிறிது சரிவைக் கண்டுள்ளது.

## கைத்தொழில் துறையின் செயற்பாடு

2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், ஒட்டுமொத்த கைத்தொழில் துறை நடவடிக்கைகள் மறை வளர்ச்சியான 2.1 சதவீதத்தைப் பதிவு செய்துள்ளன. இந்த எதிர்மறை வளர்ச்சிக்கு முக்கியமாக உற்பத்தித் துறை, கட்டுமான நடவடிக்கை மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட சரிவே காரணமாகும்.

முந்தைய ஆண்டின் மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் உற்பத்தித் துறை 0.6 சதவீதம் சுருங்கியுள்ளது. நாட்டின் கைத்தொழில் துறைக்கு அதிக பங்களிப்பு செய்யும் 'உணவு, பானங்கள் மற்றும் புகையிலை பொருட்களின் உற்பத்தி' நடவடிக்கை 2020 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடும்போது, 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 2.8 சதவீத மறையான வளர்ச்சியின் காரணமாக இந்த சுருக்கம் முக்கியமாக ஏற்பட்டுள்ளது. மேலும் உற்பத்தித் துறையில் 0.6 சதவீதம் மறையான வளர்ச்சிக்குக் காரணம், 'தளபாடங்கள் தயாரிப்புகள்' (20.4 சதவீதம்), அடிப்படை உலோகங்கள் மற்றும் புனையப்பட்ட உலோகப் பொருட்களின் உற்பத்தி உற்பத்தி" (10.9 சதவீதம்), 'இரசாயனப் பொருட்கள் மற்றும் அடிப்படை மருந்து பொருட்களின் உற்பத்தி" (6.3 சதவீதம்), “சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் உற்பத்தி” (6.2 சதவீதம்), மற்றும் 'பிற உற்பத்தி' (1.4 சதவீதம்) போன்ற செயல்பாடுகள் காரணமாகும். இந்த நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் மறையான வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தன. எனினும், சில உற்பத்தி நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் நேர் வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தன, “மரம் மற்றும் மரப் பொருட்களின் உற்பத்தி” (8.9 சதவீதம்), “இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி” (7.6 சதவீதம்), “காகிதப் பொருள் தயாரிப்பு உற்பத்தி” (7.1 சதவீதம்), “இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உற்பத்தி” (6.7 சதவீதம்), மற்றும் “புடவை மற்றும் ஆடையணிகள் உற்பத்தி மற்றும் தோல் தொடர்பான தயாரிப்புகள்” (4.9 சதவீதம்) போன்றவை.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 6.7 சதவீத பங்களிப்பை வழங்கும் 'கட்டுமான நடவடிக்கை’ இக்காலாண்டில் 6.0 சதவீதத்தின் குறிப்பிடத்தக்க எதிர் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. கட்டுமான நடவடிக்கையில் ஏற்பட்ட பின்னடைவுடன், "சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்" நடவடிக்கையும் இந்த ஆண்டின் மூன்றாவது காலாண்டில் 6.9 சதவீத எதிர்வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. எனினும், பிற கைத்தொழில் நடவடிக்கைகளான 'மின்சார உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநியோகம்‘ (1.8 சதவீதம்) மற்றும் ‘நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல்’ நடவடிக்கைகள்" (7.3 சதவீதம்) இக் காலகட்டத்தில் நேர் வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்துள்ளன.

## சேவைத் துறையின் செயற்பாடு

2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், சேவைத் துறையின் செயல்திறன் 1.6 சதவீதம் சரிந்துள்ளது. சேவைத் துறையில் ஏற்பட்ட இந்த மந்தநிலையானது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சம பங்களிப்பை (9.5 சதவீதம்) வழங்கும் "பயணிகள் போக்குவரத்துச் சேவைகள்" மற்றும் "பிற தனிப்பட்ட சேவைகள் " ஆகியவற்றில் ஏற்பட்ட இடையூறுகளே காரணமாகும். இக் காலாண்டில் இவ்விரண்டு நடவடிக்கைகளும் முறையே 14.9 சதவீதம் மற்றும் 5.7 சதவீதம் என்ற மறை வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன. "தங்குமிடம் மற்றும் உணவு மற்றும் பானங்கள் சேவை நடவடிக்கைகளில் இக் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிடத்தக்க மறை வளர்ச்சியான 19.9 சதவீதத்தைப் பதிவு செய்துள்ளது. தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தின் கீழ் மக்கள் கூடுவது தடைசெய்யப்பட்டதன் காரணமாக சேவைத் துறையில் இந்த குறிப்பிடத்தக்க சரிவு ஏற்பட்டுள்ளது.

எனினும், 2020 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டுடன் ஒப்பிடும்போது 2021 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில், இந்த துறையின் துணை நடவடிக்கைகளான 'தொலைத்தொடர்பு' (18.9 சதவீதம்), 'தகவல் மற்றும் தொடர்பாடல் ஆலோசனை மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள்' (16.1 சதவீதம்), 'நிதி சேவை நடவடிக்கைகள்' (12.9 சதவீதம்) மற்றும் 'மனித சுகாதார நடவடிக்கைகள்' (12.3 சதவீதம்) என்பன நேர் வளர்ச்சி வீதங்களாக சிறப்பாக ஆதரிக்கின்றன.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அமைய, 2021 ஆம் மூன்றாம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் (www.statistics.gov.lk/NationalAccounts/StatisticalInformation/GDP) வெளியிடப்பட்டுள்ளது.

பி. எம். பி அனுர குமார
பணிப்பாளர் நாயகம்